**செய்தி வெளியீடு எண்: 62** **நாள்: 25.01.2013**

## செய்தி வெளியீடு

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணப்படி, ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வசிக்க குடியிருப்புகள் கட்டுதல், அவர்கள் சுகாதாரமாக வாழும் வகையில் அவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்தல் போன்ற எண்ணற்ற திட்டங்களை ஏழை எளிய மக்களின் நலனுக்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் துணைத் திட்டமான ஒருங்கிணைந்த வீட்டுவசதி மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் சின்னமனூர் நகராட்சியில் 15 கோடியே 81 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 950 வீடுகள் கட்டவும் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், உசிலம்பட்டி நகராட்சியில் 10 கோடியே 1 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 460 புதிய வீடுகள் கட்டவும் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், பரமக்குடி நகராட்சியில் 7 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 520 புதிய வீடுகள் கட்டவும் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், பெரியகுளம் நகராட்சியில் 2 கோடியே 15 லட்சத்து 73 ஆயிரம் மதிப்பிட்டில் 118 புதிய வீடுகள் கட்டவும் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், ஓசூர் நகராட்சியில் 13 கோடியே 39 லட்சத்து 29 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 606 புதிய வீடுகள் கட்டவும் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், வேலூர் மாநகராட்சியில் 10 கோடியே 93 லட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் 513 புதிய வீடுகள் கட்டவும் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், ஆக மொத்தத்தில் ஏழை எளிய மக்களுக்காக வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் பணிகள் 59 கோடியே 47 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

இந்தத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக 2012-13 ஆம் நிதியாண்டின் முதல் தவணையாக மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்பாக 22 கோடியே 99 லட்சத்து 55 ஆயிரம் ரூபாயினை விடுவித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்தத் திட்டங்களின் மூலம் குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்கள், நல்ல சுகாதார சூழ்நிலையில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புகளில் வாழ்வதற்கு வழிவகை ஏற்படுகிறது.

மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக, உதவித் தொகை அதிகரித்தல், மாற்றுத் திறனாளிகள் பயிலும் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துல், அவர்கள் பயணம் செய்ய வாகனங்கள் வழங்குதல், மாற்றுத் திறனாளிகளின் நன்மைக்காக கட்டட அமைப்பு விதிகளில் மாற்றம் செய்தல், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள

அடுக்குமாடிக் கட்டடங்கள் மற்றும் பொதுக் கட்டடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்வு தடங்கள், கைப்பிடிகள், சீருந்து நிறுத்தும் இடங்கள் அமைத்தல் போன்ற எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மாற்றுத் திறனாளிகளின் நலன் பேணுவதைக் கருத்தில் கொண்டு, புதியதாக 7 நகராட்சி நிர்வாக மண்டலங்களில் உள்ள 108 நகராட்சிகளில் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தவதற்கு வசதியாக பொதுக் கட்டடங்களில் அவர்களுக்கென கழிப்பிடங்கள் அமைக்க 8 கோடியே 19 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் தொகையினை விடுவித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கை மாற்றுத் திறனாளிகளுக்கு பெரும் அளவில் உதவிகரமாக இருக்கும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 25.1.2013.